49

49

கையகக்கற்பகமாலை.

இது

உயர்திரு. பண்டித,

சித. நாராயண சுவாமிகளால்

பாடப்பெற்றது.

உயர்திரு.

...கச் சதாசிவ சுவாமியவர்களால்

...ப்பிக்கப்பெற்றது.

1933.

O2:(11)
N33
172804

உ

சிவமயம்.

விநாயகாய நம:

கையகக்கற்பகமஞ்சரி

இது

கோவிலூராதீனம் உயர்திரு

வீர. கையகச்சதாசிவ சுவாமிகளவர்கள்

கட்டளைப்படி

சிதம்பரம், உயர்திரு

பொன்னம்பலசுவாமிகள் மடத்து மாணவரும்,

மதுரைத் தமிழ்ச்சங்கம் மஹா வித்துவான்

பிரம்மஸ்ரீ, திரு. நாராயணையங்கார்ச் சுவாமியவர்கள்

மாணவருமாகிய உயர்திரு.

பண்டித

சித. சங்கத்து நாராயண சுவாமிகளால்

பாடப்பெற்று

மேற்படி உயர்திரு

வீர. கையகச்சதாசிவ சுவாமியவர்களால்

சென்னை - சூளை,

ஸ்ரீ பாரதி அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1933

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்

சிதம்பரம் உயர்திரு மௌன சுவாமிகள் மடம்.

பௌ. செ. உயர்திரு சுவாமி முத்தாநந்தா

அவர்களியற்றின

கையகத்து வாழுமொரு கற்பகத்தின் போதினைக்குப்
பொய்யிலன்பான் முப்பதுபாப் பூப்புனைந்தான்-ஐயமறக்
கற்றோன் கருணையுளோன் காசுறுமஞ் ஞானமற்றோன்
பெற்றோனு ராயணனும் பேர்.

என்றுந் துறவொழுக்க மெள்ளளவுஞ் சாய்தலிலான்
நின்றதவத் தாவலுளான் நேர்மையுளான்—ஒன்றுமிருஞ்
சீரோன்றேன் பாவுடையான் றெய்வத் திருவருளான்
வாராப் பிறப்புடையான் மன்.

உயர்திரு, போடிபட்டியருணசல சுவாமியவர்கள்
மாணவராகிய கோட்டூர் வித்துவான்,

மிகுதிரு தே. பழனியப்ப ஐயா

அவர்களியற்றியது

கையகத்தி னைம்முகனைக் கையகத்திற் காட்டுவபோல்
செய்யதமிழ் மாலை யொன்று செய்தனனுல்—துய்யசித
சங்கத்து நாரண சாமி யெனு மோர்
அங்கப் பெயர்கொள் பவன்.

சுபம் சுபம் சுபம்

உ

சிவமயம்.

விநாயகாய நம:

கையகக்கற்பக மாலை.

வையகத்தே கையகத்தில் வாழுமெழிற் கற்பகத்தின்
செய்யதமிழ் மாலை சிறக்கவே—ஐயனவன்
வாரணமாய் முந்துலவி மன்னுமளி செய்தருள்வ
னாரணனு மெற்கு நயந்து.

1 திருவே தமிழின் செறிவே
மறையின் றிருவிளக்கே
குருவே துதிக்கை வதனமும்
புயம்பெறு குஞ்சரமே
மருவேய் மலர்கொடு தாடொழு
மன்பரின் மற்றெமக்குங்
கருவே துடைத்தருள் வாய்கை
யகத்துறை கற்பகமே.

2 ஒளியே பெருக்கி யெழும்யானை
யானன வோவெனவே
விளியே பெருக்கி யழுதுநின்றேனை
விடாதி கண்டாய்
அளியே பெருக்கும் பெரியோ ரகம்போ
லளிதுதைந்து
களியே பெருக்கும் வயற்கை
யகத்துறை கற்பகமே.

3 மாலார் விழிமடவாரைப்
பொருளென மாழ்கிநிதம்
நூலார் சிலம்பி மசகமெய்த்
தென்ன நொசிதலின்றி
வேலார் கரமுரு கன்றமை
யாமினிர் மெய்ப்பதமாம்
காலார் வுவந்தருள் வாய்கை
யகத்துறை கற்பகமே.

4 பொற்ப கலாநின் றிருவுரு வைத்தினம்
பொய்யகல
அற்ப கலாக நினைந்தே யடங்கி
யறிவுருவாய்
நிற்ப கலாமதி வேணியதா
வர நேசமுடன்
கற்ப கலா துறு வாருறை
கையகக் கற்பகமே.

5 பெண்ணிற் கருங்கல மாகிய
வெள்ளைப் பெருந்தகைபோல்
விண்ணிற் கருங்கல மாகிய
வெற்புற மேவுமனம்
எண்ணிற் கருங்கல மேநினை
யாநினை யென்புரிவேன்
கண்ணிற் கருங்கல மாகிய
கையகக் கற்பகமே.

6 ஒலிக்கு மழகார் சடையு
முடியு மொளிர் முகமுஞ்
சொலிக்கு நுதல்விழி யுந்திரு
மார்புந் தோளழகும்
ஒலிக்குஞ் சிலம்பணி தாளு
மறவே னுமைதனயா
கலிக்குஞ் சிவம் பொலி
கையகம் வாழுநற் கற்பகமே.

7 விரும்பும் பொறிதினை யேனு
மிலாத யெனைவிரும்பி
அரும்புஞ் சதங்கை யடிகொண்
டகமகிழ்ந் தையவென்றன்
இரும்பு மனமுங் குழைவித்த வா
விழை யாரையொத்த
கரும்புங் கனியு நிறைகை
யகத்துறை கற்பகமே,

8 எலிமே லிவர்ந்து வருங்கோல நோக்கி
யிலந்தொறும் போய்ப்
பலியே யிரந்துன் றிருவீதி வாழும்
படைப்பினன்றோ
பொலிவே மலிந்த வலாரிதன்
வாழ்க்கை புகலினெந்தாய்
கலியே புகாது வளந்தரு
கையகக் கற்பகமே.

9 சந்தனம் பாலிருட் சுந்தரற்
காச்செலுஞ் சாமிவையம்
வந்தனஞ் செய்தில ராக முறித்த
வகையறிந்தே
வந்தனஞ் செய்தன ளூரு
மருளூதி வாரணமாய்
கந்தனங் கார வருங்கை
யகத்துறை கற்பகமே.

10 போரண வுங்கொடுங் கூற்றுவன்
வந்து பொறும் பொழுதில்
ஆரண நூபுர மோலிட வோடி
யடைந்தடியேன்
மாரண நோயறி யாவகை
தான்புரி வாய்வரதா
காரண வாரண தற்பர
கையகக் கற்பகமே.

11 காடுங் குகையுங் கனலும்
புனலுங்கங் காநதியின்
மாடுந் தகைபெற வைகிலென்
னின்பான் மனமிலராய்
வீடும் புகுவர் மனையொடு
மேவினு மெய்யன்பர்நா
காடும் பொழில்புடை சூழுமெங்
கையகக் கற்பகமே.

12 நாரையூர் மேவிய சின்னஞ்
சிறுவர் நயந்தளித்த
பெருண வெல்லா முவகையி
னுண்ட பெருங்குரவா
தேரிய யானுங் கலைபல நாளுந்
தெருட்டுதியால்
காரிய மாகும் வனஞ்செறி
கையகக் கற்பகமே.

13 பத்தித்த வாசைப் பெருந்தழல்
வாயிற் படிந்தடியேன்
மத்தித்த வெண்டயிர் போலக்
கலங்கா வகைதணிப்பாய்
தித்தித்த செந்தமிழ்த் தேவார
மாகிய தெள்ளமுதைக்
கத்தித்த ஞாலக் கறிவித்த
கையகக் கற்பகமே.

14 நினைவிய லாதபே ராநந்த
வாழ்வினை நேர்ந்தடியேன்
இனைவுறு தேக வுணர்வொழிந்
தாறி யிருப்பதென்றோ
முனைவனல் வேம்பின் றொடைமுடித்
தாடமிழ் மூதகத்தே
கனைவழி யாவயல் சூழ்தருங்
கையகக் கற்பகமே.

15 படிக்கின்ற வாறடி யேனெறி
யிற்செலப் பண்ணுதியால்
வடிக்கின்ற செந்தமிழ்த் தீம்பா
லமுத மடுத்துலவி
பிடிக்கின்ற வேற்கரப் பூவையர்
மன்றினம் பேணுமெழில்
கடிக்குங்கு மத்தனத் தார்பயில்
கையகக் கற்பகமே.

16 தழைகின்ற காம முதலாந்
தருக்க டதைந்துபுலம்
விழைகின்ற வன்மனப் பேய்நடஞ்
செய்யு விபினமதாம்
இழைகின்ற வென்னகந் தங்கத்
தகுந்த தெழுந்தருள்வேள்
கழைதின்ற வாரண மாகிய
கையகக் கற்பகமே.

17 ஒன்றே பொருளென் றுணர்ந்தின்ப
மாகிய வோங்கலின்மேல்
நின்றே களிக்கும் பெரியார்
நடுவ ணிறுத்துவையால்
இன்றே யுடலுயிர் யாவையுந்
தந்தன னீசனறுங்
கன்றே யிளங்களி றேகை
யகத்துறை கற்பகமே.

18 சித்தங் களித்துப் பிறவா
நெறியருள் தெய்வமென்றால்
வித்தங் களிக்கத் தருகுவை
யாமென வேண்டுவதோ
முத்தங் கொளிக்கும் கடற்பாண்டி
நாட்டிடை முத்தமிழின்
கத்தங் கொளித்தில வாகிய
கையகக் கற்பகமே.

19 இருளாரு நல்ல வனமாகு
மென்ற னிதயமுறத்
தெருளார்வு பெற்ற தொளியாகி
யின்பஞ் செறிந்ததம்மா
அருளா கரத்த விபமாகு
முத்த ரருகுலவுங்
கருளாரு சித்த ரிலையான
கையகக் கற்பகமே.

20 விண்ணிற் கரங்கொடு மாயாது
குத்திய வீரனைப்போல்
உண்ணற் குமஞ்சு முலோபரைப்
பாடி யுலர்தலின்றி
பண்ணிற் சிறந்த கவியா
னினைத்தொழும் பான்மைதந்தாள்
கண்ணச் சிவந்தளி சூழ்தரு
கையகக் கற்பகமே.

21 தனியே தருக்கி யறமாம்
வனத்திற் சரித்திடுமென்
மனமாங் குயிலினைக் கொங்கையென்
கண்ணி மடுத்துமதர்
வனமா னிகர்விழி மாதர்பற்
றுத வகையருள்வாய்
கனமா ருமாடஞ் செறிவான
கையகக் கற்பகமே.

22 கமலம்பு வாய்வங்கி யாகாய
மான்மா கதிர்மதியாய்
விமலங்கொள் ஞான வடிவாகி
வேத விழுப்பொருளாய்
கமலங்க லென்ன வடிசூடு
மன்பர்தங் காதலுமாம்
கமலங்கள் சேர்பொய்கை சூழ்தருங்
கையகக் கற்பகமே.

23 பூவி லுயர்ந்த கலாவல
ஞகைப் புரிந்தருள்வாய்
கோவிலுர் மேவுங் குருகுலஞ்
சேர்ந்த குணமிலையாம்
தாவறு ஞான சதாசிவன்
போற்றுந் தயாபரநெல்
காவிழி தேனுல் விளைகை
யகத்துறை கற்பகமே.

24 துறந்தோர் தமக்கு வுதவா
வெனுஞ்சில துற்குணங்கள்
அறிந்தே விலக்கினு மையயோ
யொழிந்தில வஞ்சுகின்றேன்
பறைந்தே யவைகெட நந்திருக்
கண்ணிறை பாருமையா
கறந்தே ஞிமிறுணுந் தேனிறை
கையகக் கற்பகமே.

25 ஓயாது ஞாயி றுதிக்குமு
னே துயி லோய்ந்துநினை
மாயா மனமுத லாங்கர
ணங்கொடு வந்திப்பனே
வேயாங் குழல்கொடு கன்றின
மேய்த்த விழுப்பொருளாம்
காயா மலர்நிறத் தான்மகிழ்
கையகக் கற்பகமே.

26 புயல்போற் கொடையும் புவிபோற்
பொறையும் புலஞ்சிறந்த
மயல்போந் துறவு மதிபோற்
கலையும் வழங்குதியால்
பயமே பிடித்தழி சிந்துவின்
வஞ்சனை பாற்றியிழி
கயமா முகத்தனைச் சாடிய
கையகக் கற்பகமே.

27 பூமியுங் கல்வியுஞ் செல்வமும்
வாழ்வும் புகழுமுடல்
வாமமும் பெண்டிரு மக்களு
மோமுத்தி வாழ்வுந்தரும்

பூமனு நல்ல வறுகிடின்
வாழும் புருடரையே
காமனுஞ் சாம னெடுதொழுங்
கையகக் கற்பகமே.

28 விரைசேர் குழலியர் காமவெம்
பாலை வெறுநிலத்தே
தரைவாழ் வளவுஞ் சரியா
தருளுதி சையமங்கை
அரைசே யமுதே யழகே
யணியே ஐயாவெனவே
கரைபோ தழிதந்து மேல்விழுங்
கையகக் கற்பகமே.

29 நாரதன் போலக் கலைபல
தேறினு நானிலத்தே
சீரதஞ் செய்தரு மாயையைக்
கொல்லுந் திறல்வருமோ
பாரதங் கோட்டினிற் கோட்டிய
பண்ணவ பார்புகழும்
காரதங் கார்தர வேட்டுறுங்
கையகக் கற்பகமே.

30 தேனே புரையுங் கவிபல
செய்துன் றிருவடிக்கே
ஊனே யுருகக் கனிந்தென்று
சாத்துவ னும்பன்முகா
வானேய் நதிமிலைந் தாய்வர
தாமலை மாதுபெற்ற
கானேய் மலர்வனஞ் சூழ்தந்த
கையகக் கற்பகமே.

சுபம்.